(அ) பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சித் தொகுதி, காடுமுடியில் அரசு மருத்துவமனைக்குக் கட்டப்பட்டு வரும் கட்டிடம் பாதியில் நின்றிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) இந்தக் கட்டிட வேலையை மேற்கொண்ட மருத்துவமனை வளர்ச்சி குழு முழுவதையும் கட்டி முடிக்கவில்லை. இந்தக் கட்டிடத்தை உடனடியாக முடிப்பதற்காக இயக்குநர் அவர்கள் ரூ. 75,000-க்கு திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்து அரசின் அங்கீகாரத்துக்கு அனுப்பியுள்ளார். இந்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கல்ராயன் மலைப் பகுதியிலுள்ள மூலிகைகள்.

*வினா எண் 782 திரு சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலைப்பகுதி சித்த மருத்துவத்திற்குத் தேவையான மூலிகைகள் உள்ள பகுதியென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிகமாக மூலிகை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) கல்ராயன் குன்றுகளில் மூலிகைகளை வளர்க்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. சோ. கலிதீர்த்தான்: தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியிலே மிகவும் அபூர்வமான மூலிகைகள் விளைகின்றன. அந்த மூலிகைகளைப் பயன்படுத்தி மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதற்கு, அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வி போட்டதற்குப் பின்னாலே தான் இப்படி அந்தப் பகுதியில் ஒரு அரிய வாய்ப்பு இருக்கிறது என்று நான் அறிய நேர்ந்தது.

நானும் அதைத்தான் நினைத்துக்கொண்டு இருந்தேன். ஆகவே அந்தத் திட்டம் இப்போது இல்லை என்று இங்கே நான் சொல்லியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தைப் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து தருவார்களானால் நிச்சயமாக அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

திரு. கோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியிலே கடி சம்பந்தமான வியாதிகளுக்கு இலக்கணம் என்ற தழை, நல்ல முறையில் பயன்படுகிறது. சர்க்கரை வியாதிகளுக்கு எலிக்காய் தழையும், ரத்தக் கொதிப்பிற்கு வையான் தகரி தழையும், மஞ்சள் காமாலை நோய் போக்குவதற்கான மூலிகைத் தழையும், பொதுவாக அனைத்து வியாதிகளுக்கும் தேவையான ஆதுவேர், கரிசால், முசுமுசுக்கை போன்ற தழைகளும், பாம்புகடிக்கு சிறியாநங்கை, பெரியாநங்கை என்ற தழையும், மூல வியாதிகளுக்கு நல்லிரைத் தாமரை என்ற தழையும், வாதம், நீரிழிவு நோய்களுக்கு சித்திரை மூலத்தழையும் மற்றும் பல மூலிகைகளும் பல நோய்களைக் குணப்படுத்த சிறந்தவைகளாக இருப்பவை அங்கே இருக்கின்றன. எனவே அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்கே ஒரு மூலிகைப் பண்ணை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்து இருக்கும் தகவலின் அடிப்படையில் நிச்சயமாக அதைஅரசாங்கம் பரிசீலிக்கும்.

சென்னை நகரில் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு இயந்திரம் பொறுத்தும் திட்டம்.

*வினா எண். 783—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு இயந்திரம் பொருத்தி சைக்கிள் ஓட்டச் செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 35 சி. சி. சக்தி வாய்ந்த இயந்திரங்களை சைக்கிள் ரிக்ஷாவில் பொருத்த அரசு அனுமதி வழங்கியது. தற்போது 120 சி. சி. இயந்திரங்களைப் பழைய சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. புதிதாக 50 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டும் 120 சி. சி. இயந்திரம் பொருத்த அனுமதி அளிக்கலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS